31st October 1962]

விமான நிலையம் (உளுந்தூர்பேட்டை)

* 1010-EE கேள்வி.—திரு. கு. கோபால கவுண்டர்: கனம கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) உளுந்தூர்பேட்டையில் யுத்தகாலத்தில் ஏற்படுத்தப்பட்ட விமான நிலையம் தற்போது சும்மா காலியாக இருப்பதால் அந்த இடத்தில் ஏதேனும் தொழிற்பள்ளி அல்லது சிறு தொழிற்சாலை ஏற்படுத்த உத்தேசமுண்டா?

(இ) அப்படியானல், எப்போது, என்ன தொழிற்சாலை ஏற்படுத்தப்படும்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: (அ) இல்லை, ஐயா.

(இ) இந்தக் கேள்வி எழவில்லை.

Oil refinery

* 1010-BB Q.—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Industries be pleased to state the steps taken by the Government to locate an oil refinery in public sector in the State?

THE HON. SRI R. VENKATARAMAN: Establishment of Oil Refineries is a matter within the competence of the Union Government. This Government have made representations to the Union Government in this behalf, from time to time.

திரு. மீ. கலியாணசுந்தரம்: சார், சமீபத்தில் நம்முடைய ராஜ்யத்திற்கு நிபுணர்கள் வந்து, எந்த இடத்தில் இந்த் எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலையை வைக்க முடியும் என்று பார்வையிட்டார்கள்? அவர்கள் எந்தெந்த இடங்களைச் சென்று பார்வையிட்டார்கள்? நம்முடைய ராஜ்யத்திலே அந்தத் தொழிற்சாலை ஏற்படும் என்கின்ற நம்பிக்கை ஏதேனும் இருக்கிறதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: நிபுணர்கள் தமிழ்நாட்டை மாத்திரமல்ல, தென் பிராந்தியத்தைச் சேர்ந்த நான்கு ராஜ்யத்திற்கும் சென்று பார்வையிட்டார்கள். அப்படிப் பார்வையிடும் போது எந்த இடத்தில் தொழிற்சாலையை வசதியாக வைக்க முடியும் என்று மட்டும் யோசனை செய்யவில்லை. பொதுவாக, ஆங்காங்கு இருக்கக்கூடிய நிலை, போக்குவரத்து வசதிகள், எந்த இடத்தில் அது அதிகம் உபயோகிக்கப்படுகிறது என்ற எகனுமிக் ஃபாக்டர்ஸ் பற்றியும் அவர்கள் பரிசிலனை செய்தார்கள். அவர்கள் இன்னும் ரிப்போர்ட் கொடுக்கவில்லை. "இது நம்முடைய நாட்டிற்குக் கிடைக்குமா, அந்த நம்பிக்கை இருக்கிறதா?" என்று கேட்டார்கள். மனிதனுக்கு நம்பிக்கை இருக்கிற வரையிலே, அது கிடைக்காமல் போகாது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.